Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 18
இதழ் 111

யாழ்ப்பாணம் வைகாசி 20 [illegible] 9 வியாழக்கிழமை (3-6-71)

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவெல்லர்ஸ்
போன் 444
தந்தி: இரத்தினம்ஸ்
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

12 JUN 1971
UNDERGRADUATE LIBRARY
COLLEGE

# கட்சி பேதங்களை மறந்து நாட்டுக்காக உழைப்போம்!

## பிரதமர் வேண்டுகோள்

## அபிவிருத்திக் குழுத்தலைவர்களாக 350 பட்டதாரிகள் நியமனம்

கோட்டை.புதன்

**இந்நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் கட்சிப் பாகுபாடுகளை மறந்து நாட்டின் அபிவிருத்தி வேலைகளில் தங்கள் சக்தியைச் செலவிட முன்வரவேண்டும் என்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.**

அரசாங்க ஊழியர்கள் காரியாலய நேரத்தில் தங்கள் முழு நேரத்தையும் செலவிடாமல் இருந்து வருகிறார்கள் என்றும் பிரதம மந்திரி கண்டித்துக் கூறினார். ஒவ்வொருவரும் நாட்டின் நலன்கருதி உழைப்போமானால் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாக திகழும் என்று அவர் கூறினார்.

கொழும்பு பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்களை அமைக்கும் கூட்டத்திலேயே பிரதமர் இவ்விதம் சொன்னார். அபிவிருத்திக் குழுக்களின் பொறுப்பாளராக நியமனம்பெற்ற 350 பட்டதாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

பிரதமர் இங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது: அபிவிருத்தி திட்டவேலைகளில் இளைஞர்கள் தீவிரபங்கெடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே பரஸ்பரம் இணைப்பை ஏற்படுத்து முகமாகவே அபிவிருத்திக்குழுக்களை நியமித்துள்ளோம் உத்தியோகம் பெறுவதற்காக கல்வி கற்கிறோம் என்றஎண்ணம் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் நீங்க வேண்டும். அபிவிருத்திக் குழுக்கள் அவ்வப் பகுதியிலுள்ளமுதியவர்களின் ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு நடக்கும்

ஏற்கனவே 500 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதென்றும் ஒவ்வொரு குழுவுக்கும் அபிவிருத்திச் செலவுக்கு 2லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் பிரதமர் கூறினார்.

## இலவச தபால் சேவை நிறுத்த யோசனை

கோட்டை, புதன்

அரசாங்க தேவைக்காக இதுவரை இருந்துவந்த இலவச தபால் சேவையை இல்லாமல் செய்யப்பட விருக்கிறது. இதற்கான திட்டமொன்றை தபால் அமைச்சு தயாரித்து வருகிறது.

இதன்மூலம் அரசாங்க திணைக்களங்கள் இனிமேல் அவற்றுக்கான கட்டணங்களைச் செலுத்த வேண்டி ஏற்படும் என்றும், இதனால் தபால் அமைச்சுக்கு இதுவரை இருந்துவந்த பல கஷ்டங்கள் நீங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று ஆட்சி மன்றம் கூடுகிறது

கோட்டை, வியாழன்

இன்றுமாலை 2-30 மணிக்கு ஆட்சிமன்றம் கூடவிருக்கிறது. வேலையிலிருந்து தொழிலாளர்களை நீக்குவது சம்பந்தமான மசோதா 2-வது வாசிப்புக்காக நாளை சமர்ப்பிக்கப்படும்.

## மலைநாட்டு சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், வியா

ஆடையில் தீப்பிடித்ததை தொடர்ந்து யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பதுளையைச் சேர்ந்த 18 வயதான இச்மணி என்ற சிறுமி அங்கு மரணமானார்.

பதில் மாஜிஸ்திரேட் திரு எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடாத்தினார். இச்சிறுமி யாழ்ப்பாணத்திலுள்ள வீடொன்றில் பணிப்பெண்ணாக வேலை செய்து வந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. திருமதி சரோஜினிதேவி சாட்சியமளித்தார். பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் மாஜிஸ்திரேட் விசாரணையை இம்மாதம் 9ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 100 அறைகளில் 107 பேர்

பேர்லின், ஜுன் 2

இவ்வருட ஆரம்பத்தில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 6 068,031 வீடுகள் இருந்தன. 1961க்குப் பின்னர் இங்கு 7 62 000 நவீன வீடுகள் அமைக்கப்பட்டன இக்கால கட்டத்தில் வசிக்கும் இடவசதி 10,2 வீதம் அதிகரித்துள்ளது.

இந்நாட்டில் இப்பொழுது 100 அறைகளில் 107 பேர் வீதம் வசிக்கின்றனர்.

## ரூ. 3லட்சத்து 75ஆயிரம்செலவில் குருநகரில் வீடமைப்புத்திட்டம்

யாழ்ப்பாணம், வியா

சுமார் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் குருநகரில் விரைவில் வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. குருநகர் அரசினர் மராட்டிக் கருவாலைக் கருவாமையிலுள்ள நிலத்தில் ஆரம்பிக்கப்படும் இத் திட்டத்தில் 42 வீடுகள் கட்டப்படும். இதற்கான நடவடிக்கைகளை வீடமைப்பு நிர்மாண அமைச்சர் எடுத்திருக்கிறார்.

யாழ்ப்பாண மேயரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாழ் கிளைத் தலைவருமான திரு அல்பிரட் துரையப்பா நேற்று மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இத் திட்டத்திற்கான இடத்தை அமைச்சர் பீட்டர்கெனமன் பார்வையிட்டார். அமைச்சருடன் யாழ் மேயர் திரு அல்பிரட் துரையப்பாவும் குருநகர் வட்டார உறுப்பினர் திரு எம். எஸ் பேனின்பநாயகமும் மற்றும் சபை உறுப்பினர்களும் சென்றிருந்தனர்.

இப்பகுதியில் குடிமனைசல கூட்டத்தால் ஏற்படும் நிலைமையை 2-ம் வட்டார உறுப்பினர் திரு எம் எஸ். பேனின்பநாயகம் அமைச்சருக்கு விளக்கிக் கூறினார்.

குருநகர் கட்டட திணைக்களத்திற்கு முன்னால் உள்ள மைதானத்தில் ஆரம்பிக்கப்படும் வீடமைப்பு திட்டத்தில் 68 வீடுகள் கட்டப்படவிருப்பதாகவும் இத் திட்டத்தையும் விரைவில் ஆரம்பிக்கும்படியும் மேயர் கேட்டுக் கொண்டார்.

யாழ் வீடமைப்புத்திட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

கற்குள ஒழுங்கையிலுள்ள வயலை நிரப்பி முஸ்லிம் மக்களுக்கு வீடமைப்பு திட்டமொன்றை ஆரம்பிக்கும்படி ஜனாப் எம் ஏ சி எஸ் ஏ காதர் மந்திரியிடம் வேண்டுக் கொண்டார்.

### ஊரடங்கும் நேரம்

இன்று மாலை 7-30 முதல் நாளை காலை 4-30 வரை

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

விரோதி கிருது ஆண்டு வைகாசித் திங்கள் 23-ம் நாள் (6-6-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி — 12 மணி வரையுள்ள நல்லோரையில் திரு. உமாபதி கந்தசுவாமி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற உயர்திரு K. V. கனகரத்தினம் J. P. அவர்களினதும் பாரியார் திருமதி விசாலாட்சி கனகரத்தினம் அவர்களினதும் மருமகனுமாகிய செல்வன் கிருபாகரன் (உரிமையாளர் ஹரன் ஜுவல்லர்ஸ் கன்னாதிட்டி) அவர்களுக்கும், மூளாய் திரு. K. S. மணியம் தம்பதிகளின் புதல்வி செல்வி ராதா அவர்களுக்கும் திருமணம் திருவருள் நலத்தால் நல்லூர் சட்டநாத சிவன் கோவில் வீதியில் உள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் இனபந்துக்கள் நண்பர்கள் மற்றும் யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். தனித்தனி அழைப்பு அனுப்ப இயலாமைக்கு மன்னிக்கவும்.

தங்கள் நல்வரவைநாடும்

உ. கந்தசுவாமியும் பாரியாரும், இரத்தின மாளிகை, நீர்வேலி.

K. S. மணியமும், பாரியாரும், அமிர்தவாசம், மூளாய் - சுழிபுரம்.

2822

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

H. M. V. கிறமபோன் 1 சவுண்ட்பொக்ஸ் (Extra) 20 றெக்கோட்ஸ் எல்லாம் நல்ல நிலையில், விலை ரூபா 200. விக்ரேஸ், 23, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். 3142

### தேவை

பெண் டிஸ்பென்சர் தேவை. ஜீ. சி. ஈ. சித்தி யடைந்தவர் அல்லது அவ்வகுப்பு வரை படித்தவர் விரும்பத்தக்கது. 15-6-71ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். Dr. என். ஜெயராசா ஹவ், ஆயுள் வேத டிஸ்பென்சரி, இருபாலைச்சந்தி, கோப்பாய். 3146

**காணி**

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் பரமேஸ்வராக் கல்லூரிக்கு முன்புறத்தில் நாச்சிமார் கோவில் ரேட்டு. 81/2 இலக்கத்திலுள்ள 5 பரப்புக் காணியில் 2 பரப்பு விற்பனை செய்யப்படும். விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். க. கைலாசபிள்ளை, பிள்ளையார் கோவிலடி, மண்டைதீவு. 3141

### நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

தினசரி காலை 10-30

HELICOPTER SPIES

தினசரி பி. ப. 3-00 க்கு

ஜெமினி - சரோஜாதேவி நடித்த

**எல்லோரும் இந்நாட்டு மன்னர்**

### தேவை

**கார்!**

நல்ல நிலையில் உள்ள A/40 வோக்ஸ்வகன், அல்லது 203 உடன் தேவை. விலை மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3140 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3140

### வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி

காலை 10-30, பி. ப. 2-30

சிவாஜி - பண்டரிபாய் நடித்த

**திரும்பிப்பார்**

( புதிய கொப்பி )

### ராணி

(யாழ்ப்பாணம்)

தினசரி காலை 10-00 பி. ப. 2-00

சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த

# ராமன் எத்தனை ராமனடி

### ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி காலை 10-30க்கும் பி. ப. 2-00 மணிக்கும்

எம்.ஜி.ஆர். — பானுமதி நடித்த

# மலைக்கள்ளன்

(புதிய கொப்பி)

### வின்ஸர்— யாழ்ப்பாணம்

காலை 10-30 பி.ப. 2-00

★ சிவாஜி கணேசன் ★ பத்மினி

நம்பியார் — சுந்தரராஜன் — தங்கவேலு

ஜெயலலிதா — மனோரமா நடித்த

# குருதட்சணை

### வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி காலை 10-30, பி. ப. 2-00 மணி

☆ ஜெய்சங்கர்

★ வாணிஸ்ரீ

★ லக்ஷ்மி

நடித்த

# கன்னிப் பெண்

### கெப்பிட்டல்

காலை 10, பி.ப.2-00 மணி

**எங்கவீட்டுப் பிள்ளை**

### றீகல்

காலை 10, பி.ப.2-00 மணி

**நீதிக்குப்பின் பாசம்**

### ஜலன்

காலை 10, பி.ப.2-00 மணி

**தொழிலாளி**

### பிளாஸா

காலை 10, பி.ப.2-00 மணி

**எங்கவீட்டுப் பிள்ளை**


## நெல்லியடிப் பட்டினசபை கேள்வி விளம்பரம்

### புத்தகங்கள் குத்திக் கட்டிச் சீராக்குதல் (Binding)

மேற்படி வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரையும், நெல்லியடிப் பட்டினசபைக் காரியாலயத்தில் வைப்புப் பணமாக ரூபா 25/-ம், பத்திரப்பணமாக ரூபா 2/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமைய பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தலைவருக்கு ஜூன் மாதம் 13-ந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 'சீல்' வைத்த உறையில் இட்டு முற்படுத்தப்படல் வேண்டும்.

### நிபந்தனைகள்

1. எல்லாப் புத்தகங்களுக்கும் 1 1/2 இருத்தல் "காட்போட்" மட்டை போடுதல் வேண்டும்.
2. எல்லாப் புத்தகங்களுக்கும் அரைக் "கலிக்கோ" (Calico) போடுதல்.
3. புத்தகங்களினது புதிய அட்டையில் "நெல்லியடிப் பட்டினசபை மத்திய நூலகம்" என்றும், புத்தகத்தினதும், எழுதியவரினதும் பெயர்களும் பதிக்கப்படல்வேண்டும்.
4. புத்தகத்தின் முதுகுப் புறத்தில் புத்தகத்தினது பெயர் மாத்திரம் பதித்தல் வேண்டும்.
5. புத்தகத்தினது மட்டைகள் வெட்டப்படாமல் ஒட்டப்படல்வேண்டும்.

மேலதிக தகவல்களைவும் நெல்லியடிப் பட்டின மத்திய நூலகத்தில், நூலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ச. வ. தேவசகாயம்,
தலைவர்,
நெல்லியடிப் பட்டினசபை.

பட்டினசபை அலுவலகம்,
நெல்லியடி, கரவெட்டி.
31-5-71. 2820


### விற்பனைக்கு

**கார்!**

டாக்டர் வெளிநாடுசெல்வதால் சொந்தப் பாவிப்பிலுள்ள ஒஸ்ரின் கார் விற்பனைக்குண்டு. வெள்ளிக்கிழமை காலை 9மணி-12மணி வரையும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5மணிவரையும் பார்வையிடலாம். பாலசுந்தரம், இணுவில் ஆஸ்பத்திரி. 3148

### ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி

காலை 10-30, பி.ப.1-30

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த

**தாயைக்காத்த தனயன்**

### மனோகரா

(யாழ்ப்பாணம்)

Daily 4-30 p.m. Only

Thomas Hunter

in

HILLS RUN RED

காலை 10-30 பி.ப 2-00

காந்தராவ்-ராஜசுலோசனா நடித்த

**பாட்டி சொன்ன கதை**

### REGAL (Jaffna)

Daily 10-30 a m 2-00 & 4-15 p. m.

David Hemmings

in

THE WALKING STICK

( Cinemas cope - color )


# பதவியாவில் மற்றொரு தலைவன் அகப்பட்டான்

கோட்டை, புதன் பதவியா பொலிஸ் நிலையத்தைத் தாக்கிய பயங்கரவாதிகள் கோஷ்டிகள் தலைவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பதவியாவில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார்.

நேற்று நாடெங்கிலும் பயங்கரவாதிகள் தொடர்பான எவ்விதமான சிறு நடவடிக்கைகள் கூட இடம்பெறும் அமைதியான நாளாகக்கழிந்ததாகப் பாதுகாப்புப்படைத் தகவல்கள் தெரிவித்தன. ஆயினும் பாதுகாப்புப் படையினர் காவல் நடவடிக்கைகளையும் தேடுதல் நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டனர்.

காலிப்பகுதியில் 20 கைக்குண்டுகளையும் உணவுப் பொருட்களையும் கைப்பற்றினர்.

கொழும்பில் 11 பேர் சரணடைந்திருக்கிறார்கள். எப்பிட்டியாவில் 6 பேர் சரணடைந்தனர் மதுகமையில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மதுகமையில் பயங்கரவாதிகளினால் தாக்குண்டு சேதமடைந்த பாடசாலை சிரமதான முறையில் திருத்தப்பட்டுவருகிறது.

# பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு நிலையங்கள்

சென்னை, ஜூன் 2 தமிழ் நாட்டிலுள்ள பிச்சைக்காரர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்காக ஆறு மறுவாழ்வு நிலையங்கள் தமிழ் நாட்டில் இயங்கத் தொடங்கியுள்ளன.

பிச்சைக்காரர்களின் பிரச்னையை அரசாங்கம் தான் தீர்த்துவைக்க வேண்டும் என இந்நிலையங்களை ஆரம்பித்துவைத்த அமைச்சர் திரு. தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த இல்லங்களிலுள்ளவர்களுக்கு சிறுசிறுதொழில்களைப் பயிற்றுவிக்கவேண்டும் என்றும், இவர்களுடைய மறுவாழ்வில் தான் நாடு சுபீட்சமடையும் என்றும் குறிப்பிட்டார்.

திரு. தர்மலிங்கம் பேசுகையில் விவசாயிகளின் விடாமுயற்சியினால் இந்த ஆண்டு 6 லட்சம் தொன் நெல் விளைச்சல் கூடுதலாக விளைந்துள்ளது.

## யாழ்: மாவட்ட அடைவு பிடிப்போர் சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியா. அண்மையில் ஆரம்பித்த யாழ். மாவட்ட அடைவு பிடிப்போர் சங்கத்தின் தலைவர் முகாந்திரம் ச.பி.இராசையா, காரியதரிசி எஸ்.சிவசுப்பிரமணியம், தனாதிகாரி கே. என். இளையதம்பி, வி. சுப்பிரமணியம்மற்றும் ஆர். சபாரத்தினம் ஆகிய நாலுக் கோஷ்டியினர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரைப் பேட்டிகண்டனர். அப்பொழுது மந்திரிக்கு சமர்ப்பிக்கும் மகஜர் பற்றி விவாதிக்கப்பட்டது.

கொழும்பிலுள்ளது போல யாழ்ப்பாண மாவட்டத்திலும் அடைவு பிடிப்போர் பிணைப்பணம் கட்டாமல் வழமைபோலத் தங்கள் தொழிலைநடாத்த உத்தரவு தரும்படி தமது மகஜரில் கேட்டுள்ளனர்.

இப்பொழுது கூடியபிணைப் பணம் கட்டாமல் அடைவு பிடிப்போர்க்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட ஒழுங்காகியுள்ளது. கட்டியவர்கள் பிணைப்பணத்தைத் திருப்பிப் பெறலாம்.

கொழும்பைப்போல இங்கும் தங்கட்கு சாதகமாக இவ்வேற்பாட்டினைச் செய்ய சம்மதித்த மந்திரிக்கும் அரசாங்க அதிபருக்கும் அடைவு பிடிப்போர் சங்கம் பாராட்டிச் செய்தியனுப்பியுள்ளது.

## உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், வியாழன் பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு. மாக்டீன் செல்லையா வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கூட்டுறவுமொத்த விற்பனை நிலையத்தாலும், லங்கா சதொச லிமிட்டெட்டினாலும் கூட்டுறவு சமாசங்களினாலும் நடாத்தப்படும் டிப்போக்களுக்கும் கடைகளுக்கும் சந்தைப்படுத்தல் திணைக்களத்தினாலும் பொருட்கொள்வனவு திணைக்களத்தினாலும் நடாத்தப்படும் கடைகளுக்கும் சேகரிக்கும் நிலையங்களுக்கும் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராகக் கடமையாற்ற வர்த்தக அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 35 வருடகால ஆசிரிய சேவையிலிருந்து அண்மையில் ஒய்வுபெற்ற பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராவர் சமூகசேவையில் மிகவும் ஈடுபாடுடையவரும் அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபை உபதலைவருமாவர்.


## ஏல விற்பனை

வலி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தில் 4-6-71 வெள்ளி காலை 10-00 மணி தொடக்கம் இறக்குமதி செய்த பாவித்த காற்சட்டை, கோட்டு, சுவெட்டர், பிற துணிகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வலி. மேற்கு கூ. ச
சமாஜம், சங்கானை
2824

# கணேசபவான் ஒட்டல் திறப்புவிழா

அன்புடையீர்!

நிகழும் விரோதி இருது வருடம் வைகாசி மாதம் 20-ம் திகதி (3-6 71) வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற 'கணேசபவான் ஒட்டலை' (மருதனாமடம் சந்தி) வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திருவாளர் பத்தின் அவர்களும் உடுவில் கிராம சபைத் தலைவர் ச. முத்துலிங்கம் அவர்களும் குத்துவிளக்கேற்றி திறந்துவைப்பார்கள். எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்,
செ. அழகரத்தினம்

2828

# பட்டப்படிப்புக்கு தமிழை போதனமொழியாக தெரிவு செய்தால் உதவிப்பணம் கிடைக்கும்!

சென்னை, ஜூன் 2 தமிழ்நாட்டில் பட்டப் படிப்புக்கு தமிழைப் போதன மொழியாகத் தெரிவுசெய்யும் மாணவர்களுக்கு ஊக்குவிக்கும் தொகையாக உதவிப் பணம் வழங்கப்படவுள்ளது.

தமிழக முதல்வர் திரு கருணாநிதி இதனை அறிவித்துள்ளார்.

'பி. ஏ.' அல்லது 'பி. எஸ். ஸி.' இறுதி ஆண்டுக்கு தமிழைப் போதன மொழியாகத் தெரிவுசெய்யும் மாணவர்களுக்கு ஊக்குவிக்கும் தொகையாக 180 ரூபாய் வருடமொன்றுக்கு வழங்கப்படும்.

புகுமுக வகுப்புகளில் தமிழைப் போதனமொழியாகத் தெரிவுசெய்பவர்களுக்குவருடமொன்றுக்கு 50 ரூபாய் வழங்கப்படும்.

அரசாங்கக் கல்லூரிகளில் பயில்பவர்களுக்கும் தனியார் கல்லூரிகளில் பயில்பவர்களுக்கும் இந்த ஊக்குவிக்கும் உதவிப் பணத் தொகை கிடைக்குமென்று தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

## இதுவரை 800 பேர் பலி

# கிழக்கு வங்க அகதிகளுக்கு 'வாந்தி பேதி' நோய்!

புதுடில்லி, ஜூன் 2 கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு மற்றொரு சோதனை இப்போது ஏற்பட்டுள்ளது. வாந்திபேதி நோய் அவர்களைச் சாகடிக்க ஆரம்பித்துள்ளது கிழக்கு வங்காளத்தில் இருந்து தப்பி வந்து மேற்கு வங்காள முகாமிலிருக்கும் அகதிகளையே இந்த நோய் பதம்பார்க்கக் கிளம்பியிருக்கிறது.

கல்கத்தாவில் நாடியா மாவட்ட முகாமிலிருக்கும் சுமார் 800 பேர் வாந்திபேதி நோயினால் இறந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கல்கத்தாவிலிருந்து வடக்கே 60 மைல் தூரத்தில் இம்முகாம் அமைந்துள்ளது

ஐந்து நாளில் வாந்திபேதி நோயினால் பலியானவர்கள் தொகையே 800 என்று மாவட்ட பிரதம வைத்திய அதிகாரி தெரிவிக்கிறார்.

இந்த முகாமிலுள்ள 1800 அகதிகள் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

நாடியா மாவட்டத்திற்கு அருகேயுள்ள பிரதேசத்தில் வாந்தி பேதி நோய் வேகமாகப் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கைக் கொடுமைக்கு கிழக்குப் பாகிஸ்தானில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மாண்டுபோன கோரக் கொடுமையின் வேதனை நெஞ்சைவிட்டு அகலுமுன்னரே, அங்கு கொந்தளிப்பு ஏற்பட்டுச் சண்டையாக மாறி லட்சோபலட்ச மக்கள் செத்து மடியத் தொடங்கினார்கள். இப்போது அகதிகளாக வந்தவர்களையும்கூடச் சாவு விட்டுவைக்கவில்லை.

## 3 மாதகாலத்துக்குள்

### பாகிஸ்தானில் பொருளாதார வீழ்ச்சியாம்!

புதுடில்லி, ஜூன் 2 பாகிஸ்தானில் அடுத்த 3 மாத காலத்தில் பலத்த பொருளாதார வீழ்ச்சி ஏற்படுமென்று டில்லிக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன

பாகிஸ்தான் ராணுவ ஆட்சியாளர் கிழக்கு பாகிஸ்தானில் உள்நாட்டுப் போரை ஆரம்பித்ததிலிருந்து தினமொன்றுக்கு சராசரி ஒரு கோடிரூபா அதற்காகச்செலவிடப்படுவதாகக் கூறப்படுகிறது.

மார்ச் மாதத்திலிருந்து பாகிஸ்தானின் ஏற்றுமதி வர்த்தகம் வரண்டுவிட்டது. உற்பத்தியும் வெகுவாகக் குறைந்துவிட்டது. கராச்சி லாகூர் போன்ற இடங்களில் உள்ள தொழிலாளர் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இவைகளைப் பார்க்கும் போது பாகிஸ்தானில் அடுத்த 3 மாத காலத்தில் பலத்த பொருளாதார வீழ்ச்சி ஏற்படுமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

### தற்கொலை

காலி, புதன் மபொற்றுவாவை சேர்ந்த ரி. வி. சந்திரதாசா என்ற 20 வயது இளைஞரினதும், பி.ஹேமலதா என்ற 20 வயது மங்கையினதும் சடலங்கள் பக்கமுல பொலிஸ் பகுதியில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

இவர்கள் கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்துள்ளதாக விசாரணையின் போது தெரியவந்தது.

### காலியிலும் கண் நோய்

காலி, புதன் கண்நோய் காலி மாவட்டத்திலும் பரவியுள்ளது. காலி சுகாதாரசேவை அத்தியட்சகர் டாக்டர் குலதிலகாவின் கட்டளைப்படி காலி அரசாங்க ஆஸ்பத்திரியில் கண்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன இதற்கான விசேட ஒழுங்குகளைக் காலி அரசாங்க ஆஸ்பத்திரி வைத்திய மேற்பார்வையாளர் டாக்டர் எம். ரூட்ரிக்கோ செய்துள்ளார்.

### புதிய நிர்வாகிகள்

அரியாலை, புதன் நல்லூர் வடக்கு விநாயகழகம் திரு. சி. கனகசிங்கம் தலைமையில் கூடி புதிய வருட உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தது விபரம் வருமாறு:

தலைவர்: திரு. சி. கனகசிங்கம், உபதலைவர்: திரு. இ. தணிகாசலம், காரியதரிசி: திரு. க. யோகரத்தினராசா, உபகாரியதரிசி: திரு. க. சுரேந்திரா, தனாதிகாரி: திரு. ந. நல்லதம்பி, உபதனாதிகாரி: திரு. அருணாசலம், அமைப்பாளர்கள்: திரு. சு லிங்கேந்திரன், திருநாவுக்கரசு.

### ஒருமைப்பாட்டு வாரம்

பேர்லின், ஜூன் 2 அரபு ஒருமைப்பாடு வாரமாக ஜூன் முதல் வாரம் ஜெர்மன் ஜனநாயக குடியரசில் அனுஷ்டிக்கப்படும். இது ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒற்றுமையைப் பலப்படுத்தவும் நேச உறவுகளுக்கு உரமிடவும் உதவுமென்று ஜெ.ஜ.கு. ஆசிய-ஆபிரிக்க ஒருமைப்பாட்டுச்சங்கத்தின் பொதுக் காரியதரிசி ஈ. ரென்னர் கூறினார்.

பந்தோபஸ்துக் கவுன்சில் முடிவுக்கிணங்க இஸ்ரேல் ஆக்கிரமிப்பை வாபஸ் செய்யவேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஆ. ச. கூட்டுச்சபை

### ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன் "கலகக்காரர்களால் சேதமாக்கப்பட்ட பாடசாலைகளைப் புனருத்தாரணம் செய்வதற்கென கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதிக்கு தமது ஒருநாள் சம்பளத்தைக்கொடுத்து உதவுமாறு வடபிரதேச ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபைகூடி, அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர் அனைவரையும் ஏனைய ஆசிரியர்களையும் தீர்மானம் மூலம்வேண்டிக் கொண்டுள்ளது

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ் ஆசிரியர் சங்க வடகிளை, உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் வடகிளை. வடமாகாண ஆசிரியர் சங்கம், லங்கா ஜாதிக குரு சங்க யாழ். கிளை, வடமாகாண ஆசிரியர் சங்கம் (தனியார்), இஸ்லாமிய ஆசிரியர் சங்க யாழ் கிளை ஆகியன இச்சபையில் அங்கம் வகிக்கின்றன.

நாட்டில் ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தைக் குழிதோண்டிப் புதைக்க நடந்த பலாத்கார முயற்சி தோல்வியுற்றது பற்றிச் சபை திருப்தி தெரிவித்தது.

கோட்டை புதன் புத்தளம் குருநாகல் பகுதிகளில் ஆறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது இதனால் சிறுபோக பெரும்போகப் பயிர்ச் செய்கைகளுக்கு பெரும் வசதியாயிருக்குமென கூறப்படுகிறது

## பாகிஸ்தான் உளவாளியாம்: முன்னாள் மந்திரி கைது!

கல்கத்தா, ஜூன் 2 பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் மந்திரி ஒருவரும், முன்னாள் பாலிமெண்ட் உறுப்பினர் ஒருவரும் கல்கத்தாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்க ஐக்கிய முன்னணி மந்திரி சபையில் இருந்த முன்னாள்மந்திரியும், முன்னாள் லோக் சபை உறுப்பினர் ஒருவரும் இவ்வருடம் மே 7ம் திகதிய பாதுகாப்பு அவசரச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டனர்.

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த குற்றத்திற்காக இதுவரை 7 பாரதப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உளவுபார்த்த குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்டுள்ள சகலர் மீதும் வழக்குத் தொடரப்படும் என்றும் இதுசம்பந்தமான சட்ட ஆலோசனைகள் பெறப்படுகிறதென்றும் மேற்கு வங்க உள்துறை தலைமை அதிகாரி தெரிவித்தார்.

## 'லாவோஸில் குண்டு வீச்சு நிறுத்தப்பட வேண்டும்'

ஹனோய், ஜூன் 2 லாவோஸில் அமெரிக்கா நடத்தும் மிருகத்தனமான குண்டு வீச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படவேண்டும். தென்வியட்னாம் குடியரசின் அயல்துறை அமைச்சு இப்படி கோரியுள்ளது.

லாவோஸ் பற்றிய 1962 ஜெனிவா உடன்படிக்கையை கௌரவித்து அமெரிக்கா செயல்படவேண்டுமென்றும் அறிக்கை வலியுறுத்துகிறது.

லாவோஸ் பிரச்சினை அரசியல் ரீதியாக தீர்க்கப்படவேண்டுமென்று லாவோஸ் தேசபக்த முன்னணியின் புதிய திட்டத்தை தென்வியட்னாம் குடியரசு ஆதரிக்கிறது என்றும் அமைச்சு கோரியுள்ளது.

### ஆலய தர்மபரிபாலன சபை

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில் தர்மபரிபாலன சபையின் 35 ஆவதுவருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு வை செல்லையா உபதலைவர்: திரு செ சின்னத்துரை செயலாளர்: திருவ கந்தசாமி உப செயலாளர் மு க இரத்தின வேலுப்பிள்ளை பொருளாளர்: ஆர் பி சுப்பையாசெட்டியார் உப பொருளாளர் ஏ. கந்தையா நிர்வாக சபை உறுப்பினர்களாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


கிழக்கிலங்கை

கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனம்

## அறிவித்தல்

சகல டயறி மற்றும் கலண்டர் உற்பத்தியாளர்களுக்கும்

கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துள்ள சகல டயறி மற்றும் கலண்டர் உற்பத்தியாளர்களும், 1972-ம் ஆண்டுக்கான கடதாசி மற்றும் கடதாசி அட்டைகள் ஆகியவற்றின் தேவைகளை, 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமுகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனம்

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.
28-5-1971

2819

# 'நோய்களுக்கு பட்டினி சிகிச்சை சிறந்த பலன்களை அளிக்கும்'

புதுடில்லி, ஜூன் 2
பலவகையான உடல் உள நோய்களுக்குப் பட்டினி சிகிச்சை மிகச் சிறந்த பலன்களையளிக்கும் என்பது பேராசிரியர் டாக்டர் ஒய். எஸ். நிக்கோலயேவின் பரிசோதனைகளிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி நகரசபைக் கார்ப்பரேஷன் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் டாக்டர் நிக்கோலயேவ் உரையாற்றினார். இந்திய வைத்திய முறையைப் பின்பற்றும் டாக்டர்கள் பலர் இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தனது ஆய்வு கூடத்தில் 500க்கு மேற்பட்ட நோயாளிகளிடம் பட்டினி சிகிச்சை முறையைக் கையாண்டதாகவும் அதில் 80 சதவிகிதத்திற்கு மேல் வெற்றியடைந்ததாகவும் அவர் கூறினார். வளர் சிதைமாற்றக் கோளாறுள்ள நோயாளிகளுக்கும், பெருத்தசரீரமுள்ள நோயாளிகளுக்கும் குறிப்பாக இச்சிகிச்சை முறை நல்ல பலனையளித்தது. 200 கிலோ கிராம் எடைக்கு மேலுள்ள நோயாளிகள் தங்களது எடையில் 20 25 கிலோ கிராம் எடையை இந்தச் சிகிச்சைக்குப் பின்னர் இழந்தனர்.

மனநோயாளிகளுக்கும் இச்சிகிச்சை நல்ல பலனையளித்தது. மனப்பிளவு நோய்க்கு அது மிகச் சிறந்தது.

இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் பட்டினி சிகிச்சை முறையில் டாக்டர் நிக்கோலயேவ் பெரிதும் ஈடுபாடு காட்டினார். அது குறித்து மேலும் ஆராய்ச்சிகள் நடத்துவதே அவரது தற்போதைய விஜயத்தின் நோக்கம். 1927ல் ஓர் இந்திய யோகியுடன் அவருக்கு ஏற்பட்ட பரிச்சயமே, அவருக்கு இந்த முறையில் ஈடுபாட்டை ஏற்படுத்தியது.

தொடக்கத்தில் அந்தப் புதிய முறைகளைப் பற்றிப் பலரும் சந்தேகத்தை எழுப்பினர். எனினும் அம்முறைகள் தற்போது அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றார் டாக்டர் நிக்கோலயேவ்.

இந்தியாவிலுள்ள ஆயுர்வேத முறையை ஆராய்வதற்காக பேராசிரியர் நிக்கோலயேவ் 1967-ல் இங்கு ஒரு தடவை விஜயம்செய்தார். 'பட்டினி மூலம் சிகிச்சை' என்ற தனது நூலில் ஒரு முழு அத்தியாயமே ஆயுர்வேத முறைக்கு அவர் ஒதுக்கியுள்ளார்.

டில்லி மேயர் ஸ்ரீ ஹன்ஸ் ராஜ் குப்தா விழாவுக்குத் தலைமை வகித்தார். டில்லி மாநகராட்சி மன்ற உதவி சுகாதார அதிகாரியான சிவிராஜ் கே பி ஆத்திரேயா, நிக்கோலயேவை கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தினார்.

······

## ''தமிழ் மூலம் கற்பிப்பதே பொருத்தம்''

சுழிபுரம், புதன்
''சித்த வைத்திய நூல்கள் யாவும் தமிழ் மொழியில் நிறைய இருக்கின்றன. தமிழ் மொழிமூலம் கற்பிக்கும் வைத்திய நிபுணர்கள், நிறைய இருக்கின்றனர். பின்னர் ஏன் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக மாணவர்கள் கற்கவேண்டும் என்பது புரியவில்லை இன்று வேறு மொழிகளிலேயுள்ள நூல்களைக் கூடதமிழ்மொழியில் பெயர்த்துக் கற்பிக்க போதிய வசதிகள் இருக்கின்றன. இந்நிலையில் தமிழ் மாணவர்கள் தமது தாய்மொழியில் சகல பாடங்களையும் கற்கச் செய்வதே சாலவும் பொருத்தமாகும்.''

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றை வழக்கம் பரை தமிழ் மன்றத்தினர் ஆயுள் வேத ஆணையாளருக்கும் சுகாதார அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

······

அரியாலை, புதன்
நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் முன்புறத்தில் புதிய மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இம்மண்டபத்தில் தேவாரப் பாடசாலையும் சமய வகுப்புகளும் நடைபெறுமாம். இம்மாதம் 10-ந் திகதி புதிய மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 20-ந் திகதி

3- 6- 71

மேஷம்- அரசபயத்துக்கு இடம் உண்டு. வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம் எதிலும் நிதானபுத்தியுடன் நடந்துகொள்வது விரும்பத்தக்கது.

ரிஷபம்- கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை, காதலர்கள் எண்ணங்கள் கைகூடும். இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும்.

மிதுனம்- தொழிற்துறையில் முன்னேற்றம் தொடர்ந்துவரும். புகழ்நிதியில் அபிவிருத்தி நிம்மதி பிறக்கும். உற்சாகமான நாள்.

கடகம்: பணவருவாயில் நல்ல திருப்பம் ஏற்படும். விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும். சிலர் உல்லாசப்பயணம் ஒன்றுக்கு திட்டமிடுவார்கள்.

சிம்மம்-வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். வீணான சிந்தனைகளால் வேதனைப் படுவீர்கள்.

கன்னி- பணவிவகாரத்தில் அதிக கவனம்செலுத்தவும். தொழில்துறையில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும். நாணயம் மிகவும் விரும்பத்தக்கது.

துலாம்- மேடைப் பேச்சாளர்கள் நின்று பெரும் புகழடைவர். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. மௌனம் நன்று.

தனுசு- அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அறிஞர்களின் ஆதரவும் கிடைக்கலாம். பொருள்வரவும்கிடைக்கும்.

மகரம்- அறவழிகளில் மனநாட்டம் செல்லும். தாராள மனப்பான்மையின் மூலம் பணமும் செலவாகும். இளையபிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

கும்பம்- பகைமுட்டம் வகிடயிடும், வீணான வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில்துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும்.

மீனம்- கனிவான சம்பவங்கள் நடைபெறும். காதலர்களுக்கு கலகுஷியான தினம். தாம்பத்திய வாழ்க்கையில் பிணைப்புகள் மேலும் பலப்படுத்தப்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

சுழிபுரம். புதன்
வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவுகரபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது. காலஞ்சென்ற முதலியார், பி. எம். சங்கரப்பிள்ளை நினைவு வெற்றிக்கிண்ணத்துக்காக நடைபெறும் இப்போட்டியில் ஒன்பது கழகங்கள் பங்கு கொள்ளவுள்ளன. போட்டிக்கான ஏற்பாடுகளை விளையாட்டுப் போதனாசிரியர் திரு. ச. சுப்பிரமணியம் கவனித்து வருகின்றார்.

வெளி நாடுகளில்

# பனம் பிரஷுக்கு நல்ல மதிப்பாம்

அம்பன், புதன்
''ஒரு கிராமம் தன்னிறைவுபெற்று முன்னேற்றமடையவேண்டுமெனில்கிராமச் சந்தை அத்தியாவசியமாகும். கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருளை விற்பனவு செய்யவும், கொள்வனவு செய்யவும் சந்தை வழிவகுப்பதுடன் கிராம முன்னேற்றத்திற்கும் வழிகாட்டியாக அமைகின்றது'' என்றுகுடத்தனைக் கிராம சபைப் பகுதி அபிவிருத்திச் சபையின் திட்டத்திற்கமைய நாகர்கோவிலில் அமைக்கப்பட்ட பொதுச்சந்தையைத்திறந்து வைத்துப் பேசுகையில் பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் தெரிவித்தார்.

குடத்தனைக் கிராம சபை உபதலைவர் திரு க க சிவசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் எம் பி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''குடத்தனைக் கிராம சபைப் பகுதியில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பனை மரங்கள் இருக்கின்றன. பனம்மட்டையைக்கொண்டு முதல்தரமான 'பிரஷ்' உற்பத்தி செய்யலாம் இங்கு உற்பத்திசெய்யப்படும் பிரஷுக்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்புள்ளது. குறைந்தது வருடத்தில் ரூபா50ஆயிரம் பெறுமதியான பிரஷ் வகைகளை நாம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யலாம். உள்ளூர் மூலப்பொருள்கள் பிரயோசனப்படுத்தப்படுவதுடன் பொருளாதாரம் பெருகவும், வேலைவாய்ப்பு ஏற்படவும் ஏதுவாக இத்தொழில் அமையும்.

இத்தொழில் பற்றித் தாம் அதிகசிரத்தை கொண்டுள்ளதாகவும் எம் பி தெரிவித்தார்.

வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி திரு மு தம்பிமுத்து, திரு ஏ வி பொன்னு, க சோமாஸ்கந்தர், தாமரைவேந்தர் ஆகியோரும் உரையாற்றினர்.

# இலங்கைதேயிலைகத்திகளுக்கு ஆபிரிக்க நாடுகளில் கிராக்கி

கோண்டாவில், புதன்
தேயிலைச்செடி கத்தரிக்கும் கத்திகளை ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் 20 ஆயிரம் ரூபாவை வெளிநாட்டு செலாவணியாக இலங்கை சம்பாதித்துள்ளது.

உலோகத் தொழில்கூட்டுத்தாபனம் இந்தக் கத்திகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்தது. ஆபிரிக்க நாடுகளில் இந்தக் கத்திக்கு பெருத்த கிராக்கி இருந்து வருகிறதாம்.

கடந்த 5 மாத காலத்தில் 10 ஆயிரம் கத்திகளை இலங்கை ஏற்றுமதிசெய்துள்ளது.

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

மாவிட்டபுரம், புதன்
விமன்காமம் சைனிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பழை இளமோகன் விளையாட்டுக் கழகமும் மோதிய கிரிக்கெட் போட்டியில் வீமன்காமம் கோஷ்டி வெற்றிபெற்றது

தெல்லிப்பழை ஜேமஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் கதிர்காமநாதன் வெற்றிக்கேடயத்துக்கென நடாத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கட்டுவன் நிறந்தவெளியரங்கில் நடைபெற்றுவருகிறது.

இச்சுற்றுப்போட்டியின் சில முடிவுகள் வருமாறு:-

வீமன்காமம் கோஷ்டியும் தெல்லிப்பழைக்கோஷ்டியும் மோதிய போட்டியில் வீமன்காமம் சகல விக்கெட்டுகளையும் இழந்து 93 ஓட்டங்களையும். தெல்லிப்பழை சகல விக்கெட்டுகளையும் இழந்து 39 ஓட்டங்களையும் பெற்றதால் வீமன்காமம் 54 ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

காங்கேசன்துறை யங் ரோயல் விளையாட்டுக்கழகமும் ஏழாலை யுத் புரோகிரஸ் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் காங்கேசன்துறை கோஷ்டி ஆறு விக்கெட்டை இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றது. ஏழாலைக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் யங்ரோயல் 4 விக்கெட்டுகளாலும் 3 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது.

மாவிட்டபுரம் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், காங்கேசன்துறை ஜெவான் ரெஸ்ட் விளையாட்டுக் கழகமும் மோதவிருந்த போட்டியில் காங்கேசன்துறைக் கோஷ்டி கலந்துகொள்ளாததால் மாவிட்டபுரத்துக்கு வெற்றியளிக்கப்பட்டது.

## பெற்றேலியம் ரூ. 5 ஆயிரம்

கோண்டாவில், புதன்
பயங்கரவாதிகள் புனருத்தாரண நிதிக்காக பெற்றோலியம் கூட்டுத்தாபனம் ஐயாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. இலாபம் தேவாலயங்களின் திருச்சபை பயங்கரவாதிகளின் சக்திகளுக்கு அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு எதிர் நடவடிக்கைகளுக்கும் தாங்கள் முழு ஆதரவளிப்பதாகவும் பெருந்தொகையான பணமுடிப்பையும் வழங்கியுள்ளது.

வாழைச்சேனையிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக் கிளை அரசாங்கத்துக்கு 350 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. இலங்கை வட உத்தியோகத்தர் சங்கம் இரத்த தானம் வழங்கியுள்ளது. ருவான்வல கிராமசபை 250 ரூபா நன்கொடை வழங்கியுள்ளது.

······

## பெரியோர்கள் ஆதரவு வேண்டும்

உடுப்பிட்டி. புதன்
நூல்நிலையங்களே நாட்டின் அறிவுக் களஞ்சியமாகும். வாலிபர்கள் பயனுள்ள பணிகளில் ஈடுபடுவதின் மூலம் தமது கிராமத்தை முன்னேற்ற முடியும். இளைஞர்களின் முயற்சிகளுக்குப்பெரியோர்கள் ஆதரவும் ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று நெல்லியடிப் பட்டின சபைத் தலைவர் திரு எஸ் பி தேவசகாயம் கரணவாய் - கரவெட்டி இளைஞர் அபிவிருத்தி இயக்க நூல் நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

மடம்விழ

## திருவள்ளுவர் கழகம் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணம் மடம் வீதி திருவள்ளுவர் முன்னணிக் கழகம் கழகத்தலைவர் திரு. க. கி. கிருஷ்ணன் தலைமையில் கூடி கழகத்தின் 35வது வருடவெள்ளிவிழாக்கொண்டாட்டத்தைக் காலவரையறையின்றி ஒத்திவைப்பதாகத் தீர்மானித்தது. இவ்விழாவை இம்மாதம் கொண்டாடவதென்றும், இதனையொட்டி இலக்கிய விழா விளையாட்டுவிழாக்கள் நடத்துவதென்றும் முன்னர் அறிவிக்கப்பட்டு இந்த நாட்டு நிலைமை சீரடைந்தபின் விழாவைக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## அறிவித்தல்

### சீமேந்து விநியோகம்

1-6-71 தொடக்கம், 25 பைகளுக்கு மேற் தேவைப்படுவோர், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சீமேந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய விண்ணப்பப்படிவம், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் ரூபா 1/-க்குக் கிடைக்கும். ஒரு பை சீமேந்தின் தற்போதைய தொழிற்சாலை விலை ரூபா 10/50

25 பைகள் வரை தேவைப்படுவோர், பிரிவுக் காரியாதிகாரியின் (D. R. O) சிபாரிசுடன் அண்மையிலுள்ள கூட்டுறவுச்சங்கங்களில் தங்கள் தேவைகளைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பிரான்சிஸ்,
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை,
30-5-1971.

# இளகிவரும் செஞ்சீனா

பஸ்டில் வீழ்ச்சியின் 150-வது வருட நிறைவையொட்டிப் பாரிஸ்நகரில் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இக்கொண்டாட்ட வைபவமொன்றில் ஒரு பிரமுகர் அங்கிருந்த சீன விருந்தாளி ஒருவரைப் பார்த்து ஐரோப்பிய அரசியலில் பிரான்சின் மகிமை பிரான்சியப் புரட்சி எந்தளவுக்கு மாற்றியுள்ளது என நீங்கள் நினைக்கிறீர்கள் எனக் கேட்டார். இதற்குப் பதில் சொல்ல இன்னும் காலமிருக்கிறது. இவ்வளவு விரைவில் அதைச் சொல்லிவிட முடியாது என விடையளித்தார் அச்சீனப் பிரமுகர். இக்கதை உண்மையோ அல்லது பொய்யோ எப்படியிருப்பினும் இது சீனாவுக்கும் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் இடையேயுள்ள பரஸ்பர விளக்கமின்மையை எடுத்துக்காட்டுகிறது. இத்தகையதொரு விளக்கமின்மையால் சீனாவின் அரசியல் சித்தாந்தம், சிந்தனை, கோட்பாடுகள் ஆகியயாவும் மேற்கத்திய நாடுகளினதிலும் பார்க்க வேறுபட்டேயுள்ளன.

சீனப் புரட்சி நடைபெற்று 21 ஆண்டுகள் ஆகின்றன. அன்றிலிருந்து சீனா அனுசரித்துவரும் தனித்து நிற்கும் தன்மை சீனா பற்றி அறிய மேலும் தடையாகவிருக்கிறது. சீனா தனது நாட்டிற்குள் அந்நியரை அனுமதிப்பதில்லை. இதனால் சீனாபற்றிய தகவல்களை அறிவது யாவருக்கும் மிகவும் கஷ்டமான விஷயமாகவேயுள்ளது. இதனால் சீனா பற்றிய பிறநாட்டவரது கருத்துக்கள் யாவும் அதுபற்றிய பூரண விளக்கமின்மையால் எழுந்தவைகளாகவேயுள்ளன.

சீனாவின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய மேற்கத்திய நாடுகளின் கருத்து தனிப்பட்ட ஒவ்வொருவரதும் பாரபட்சமான எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவுள்ளன. இவர்களில் சிலர் சீனா பிறநாட்டுத் தொடர்பற்ற வகையில் தனக்கென ஓர் அரணை ஏற்படுத்தியுள்ளதால் ஒருநாளைக்கு அது இந்தியாவை ஆக்கிரமிக்கும், பின் சிலநாட் செல்ல தென்கிழக்காசியாவின்மேல் ஆக்கிரமிப்பு நடத்திப் பின்னர் உலகின் ஏனைய பகுதிகளிலும் தனது ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் எனக் கூறுகின்றனர்.

வேறு சிலர் முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவினதும் தற்போது பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கும் ரஷ்யாவினதும் நடவடிக்கைகள் சீனாவைப் பாதிக்காதவாறு கட்டுப்பாட்டுடன் இருக்கவே இந்த அரணைச் சீனா அமைத்துக்கொண்டுள்ளது எனக்கருகின்றனர். இவ்வாறு சீனா பற்றிப் பலர் பலவாறுகக் கருதுகிறார்களேயன்றி உண்மையில் ஒருவருக்கும் என்ன நடைபெறுகிறதென்று தெரியாது. இதனால் உலகநாடுகளுக்குச் சீனாவிடத்தில் அடிக்கடி அச்சமும் சந்தேகமும் ஏற்படுகின்றன.

சீனாவின் இத்தகைய கட்டுப்பாடான நிலை இன்று ஓரளவு தளர்ச்சியடைந்து வருகிறது. சீனாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான உறவு சந்தேகத்துக்கிடமாக இருப்பினும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விரு நாடுகளுக்குமிடையே போர் எந்த நேரத்திலும் மூளலாம் என்று இருந்த நிலை இப்பொழுதில்லை.

உலக நிறுவனமாகிய ஐ.நா பற்றி சீனாவிடம் நிலவிய கருத்தும் தற்போது பெரிதும் மாறுபட்டுள்ளது இந்த ஐ நா ஸ்தாபனம் ஒரு 'அலட்டல் அரங்கு' என அதை இழிவாக இதுவரைகாலமும் கூறிவந்த சீனா அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளிவைத்துள்ளது ஐ.நா.வில் சீனா இடம் பெற வேண்டும் எனக் கூறி ஆதரவளிக்கும் நாடுகளுக்கெல்லாம் இன்று சீனா நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகள் ஐ. நா. வில் சீனா அங்கத்துவம் பெறுவதை விரும்புகின்றன. ஆகக்கூடிய இரு வருடங்களில் சீனா ஐ. நா.வில் அங்கத்துவம் பெறலாம்.

ஐ. நா. குறித்து சீனாவிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் உலகநாடுகள் சிலவற்றிடையே சீனாவுக்கு ராஜதந்திர உறவும் ஏற்பட்டுள்ளது. மாஸ்கோவுக்கு விரைவில் சீனத்தூதர் ஒருவர் அனுப்பப்படவுள்ளார். ஏற்கனவே பீக்கிங்கில் சோவியத்தூதர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சீனா, தென்கிழக்காசியா வெங்கும் தனது இராணுவபலத்தை விஸ்தரித்து அதனால் தென்கிழக்காசியாவைக் கைப்பற்றும் என்ற அசையாத நம்பிக்கையுடன் இருந்துவந்த அவுஸ்திரேலியாகூட தற்போது இக்கொள்கை சரியோ எனச் சிந்திக்க ஆரம்பித்துள்ளது. பிரிட்டன்-சீன உறவும் இப்போது வலுப்பெற்று வருகிறது. மேற்கில் முதன்முதல் மக்கள் சீனக் குடியரசை அங்கீகரித்த நாடு பிரிட்டனேயாகும்.

21 ஆண்டுகளுக்குமுன்னர் எனஸ்ட்பெவின் என்பவர் சீனாபற்றி பின்வருமாறு கூறியுள்ளார். சீனா தனது அரணைவிட்டு வெளியேறி உலகநாடுகள் மத்தியில் வர வேண்டுமானால் உலகநாடுகள் எந்தவிதமான மக்களோடு நாம் தொடர்பு கொள்ளப்போகிறோம் என்பதுபற்றியறிந்திருக்க வேண்டும். முக்கியமாக சீனா, ரஷ்யா அமெரிக்க நாடுகளின் கட்டுப்பாட்டுக்கு அடிபணிந்து நடக்கமாட்டாது. இன்னும் பத்தோ அல்லது பதினைந்து வருடங்களில் இவ்வல்லரசுகளோடு சமமாக நிற்கத்தக்கவகையில் சீனா முன்னேறக்கூடும் சீனாவின் இராணுவ பலமொருபுறமிருக்க அதன் அணுவாயுத பலம் ஏனைய நாடுகளிலும் பார்க்க அதிகரித்துக் கொண்டுவருகிறது. 1980-ம் ஆண்டு சீனா வல்லரசு என்ற வரிசையில் வந்துவிடலாம்.

மாசேதுங்கின் புரட்சிகர சீனா எத்தகையது? இக்கேள்விக்கு சமீபத்தில் சீனாவுக்கு விஜயம்செய்த பிரான்ஸின் முன்னைநாள் பிரதமர் திரு. எம். கோவ் பின்வருமாறு 'லண்டன் ரைம்ஸ்' எனும் பத்திரிகையில் கூறியுள்ளார். யாவருக்கும் எல்லாம் சமமான அளவு கிடைக்கக்கூடியதும் மிகச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதுமான சமூகத்தையே சீனாவில் கண்டேன். அங்கு இல்லையென்பதற்கே இடமில்லை. ஒவ்வொருவருக்கும் போதியளவு உணவும், உடையும் கிடைக்கிறது. மக்கள் யாவரும் உற்சாகமானவர்கள். தேனீக்கள் போன்று எந்நேரமும் ஏதாவது வேலையில் ஈடுபட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். பிள்ளைகள் யாவரும் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருக்கிறார்கள். கல்வி எல்லோருக்கும் திருப்தியளிக்கத்தக்க வகையில் அளிக்கப்படுகிறது.

— அலுவலக எழுத்தாளர்

# மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யத்திட்டம்

கோட்டை, புதன்

மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்ய மீன்பிடி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மீன்பிடி தொழிலை யந்திரமயமாக்கவும், நவீனவலைகளை அளிக்கக் கூடியவிதத்திலும் மீன்பிடித் தொழில் இனி அமையக் கூடியதாக திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

நாடு மீன்பிடித்துறையில் தன்னிறைவு பெறக்கூடியதாக மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதேகடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்சவின் திட்டமாகும்.

றால், நண்டு போன்றவற்றை கூடுதலாகப் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த அபிவிருத்திசம்பந்தமாக கவனிப்பதற்கு ஏற்கனவே நான்கு குழுக்களை கடற்றொழில் அமைச்சர் நியமித்துள்ளார்.

## "சித்தவைத்திய ஆய்வுக்குழு அரசு அமைக்க வேண்டும்"

அரியாலை, புதன்

சித்தவைத்திய மாணவர்களுக்கு சமஸ்கிருத பாஷை முக்கியமா என்பது இப்போதுசித்தவைத்திய மாணவர்கள் மத்தியில் பிரச்னையாயிருந்துவருகிறது. இன்று சித்தவைத்தியத்தை பயிலும் மாணவர்கள் எல்லோரும் தமது தாய்மொழியாகிய தமிழ் மொழியிலேயே வைத்தியத்தை கற்றுவருகின்றனர். சித்தவைதியத்தின் மூல ஆதாரங்கள் தமிழ் மொழியில் மறைந்துகிடப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறு மறைந்து கிடக்கும் சித்தவைத்திய தமிழ் நூல்கள் எளியதமிழில் தொகுத்து வெளியிடப்படுமானால் இன்றைய வைத்தியமாணவர்களுக்கு உதவியாக இருக்கும்" என்று அரியாலை ஸ்ரீகலைமகள் முற்போக்கு வாலிபசங்கத்தின் செயலாளரும் வைத்திய மாணவருமான எம். ஜி. திலைநாயகம் இங்குநடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"சமஸ்கிருத பாஷையில் இருக்கும் சித்தவைத்திய சாஸ்திரங்களையும் தமிழில் பெயர்த்து வெளியிடுவதும் பயனளிப்பதாகும். சித்தவைத்திய சாத்திரங்கள் எம்மொழியில் இருந்தாலும் சரி, இலங்கையில் இருக்கின்ற சித்தவைத்திய அறிஞர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசாங்கம் அமைத்து ஆராய்வதன் மூலம் இத்துறையில் பல முன்னேற்றங்களைக் காணவாய்ப்பு ஏற்படும்." என்று அவர் சொன்னார்.

## உயிர்ப்பலியின்றி உற்சவம்

மாவிட்டபுரம், புதன்

தொல்புரம் மத்தி கொட்டடிப்பதி ஆதிமுத்து மாரியம்மன் ஆலய உற்சவம் ஆரம்பமாகி நடைபெறுகிறது. இதுகாலம்வரை உயிர் பலியிடப்பட்டுவந்த இவ்வாலயத்தில் இம்முறை ஆலயம் புனரமைக்கப்பட்டு பவித்திரத்தப்பட்டு உற்சவம் நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

யாழ் நகரில்

# இந்திரஜால கோஷ்டியினர் மீண்டும் ஆராய்கின்றனர்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையில் புதை பொருள் இலாகாவால் கண்டு எடுக்கப்பட்ட சாசனக் கல் தூண்களின் ஆராய்ச்சி களைநிதி இந்திரபால குழுவினரால் மீண்டும் இவ்வாரம் யாழ். நூதனசாலையில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது.

முதல்கல்தூண் சாசனத்து எழுத்து இராஜ ராஜேஸ்வர சோழன் காலத்து எழுத்துகளாகவே இருப்பதாகவும்; அவை கவிதைத் தொகுப்பாகவும், இரத்தினச் சுருக்கமான விளம்பரமானவையாக விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(குவிம)

# மகாஜன சம்பத சுவீப் முடிவுகள்

கோட்டை, புதன்

கடந்த ஏப்ரல் மாதம் 30-ந் திகதி இழுக்கப்படவிருந்த 26-வது மகாஜன சம்பத சீட்டிழுப்பு மாத் தறையில் கடந்த மேமாதம் 31-ம் திகதி இழுக்கப்பட்டது. அந்தச் சீட்டிழுப்பின் அதிகாரபூர்வமான முடிவுகள்:

விற்கப்பட்ட மொத்த டிக்கட்டுகள்: 4,68,300

நிதித்திரட்டுக்கு செலுத்திய தொகை:

ரூபா. 192, 564 - 96 சதம்

முதலாவது பரிசு

08 E 000677 ரூபா 46,830

இரண்டாவது பரிசு

16 K 000688 ரூபா 46 830

மூன்றாவது பரிசு

01 O 000443 ரூபா 46,830

தலா ரூபா 234-15 சதம் கொண்ட 200 ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 01A000429 | 01A000810 |
| 04A000099 | 06A000521 |
| 09A000146 | 10A000799 |
| 14A000878 | 15A000318 |
| 16A000571 | 17A001000 |
| 18A000273 | 19A000410 |
| 02B000747 | 03B000929 |
| 04B000310 | 05B000061 |
| 08B000587 | 11B000245 |
| 14B000487 | 15B000967 |
| 16B000640 | 16B000848 |
| 18B000273 | 18B000625 |
| 19B000049 | 02C000483 |
| 02C000893 | 06C000643 |
| 11C000070 | 15C000352 |
| 18C000432 | 20C000102 |
| 01D000862 | 03D000664 |
| 13D000035 | 16D000582 |
| 17D000878 | 02E000666 |
| 07E000829 | 09E000100 |
| 11E000584 | 16E000162 |
| 17E000264 | 07F000113 |
| 08F000488 | 12F000173 |
| 12F000220 | 14F000503 |
| 16F000820 | 18F000484 |
| 18F000528 | 03G000343 |
| 03G000522 | 04G000513 |
| 08G000167 | 11G000497 |
| 11G000504 | 11G000676 |
| 17G000619 | 02H000058 |
| 02H000087 | 02H000167 |
| 02H000336 | 05H000971 |
| 06H000447 | 06H000688 |
| 11H000843 | 15H000106 |
| 15H000818 | 17H000936 |
| 19H000503 | 03J000475 |
| 05J000003 | 03K000490 |
| 05K000575 | 13K000428 |
| 14K000113 | 18K000277 |
| 18K000997 | 19K000289 |
| 02L000122 | 04L000172 |
| 18L000030 | 18L000377 |
| 01M000533 | 07M000293 |
| 10M000139 | 17M000207 |
| 02N000037 | 03N000228 |
| 04N000043 | 07N000488 |
| 08N000148 | 09N000553 |
| 11N000165 | 13N000520 |
| 13N000876 | 14N000950 |
| 16N000750 | 17N000614 |
| 17N000882 | 20N000216 |
| 02O000234 | 04O000655 |
| 04O000816 | 07O000252 |
| 08O000450 | 09O000944 |
| 15O000864 | 17O000647 |
| 20O000848 | 02P000431 |
| 02P000478 | 03P000734 |
| 06P000333 | 06P000383 |
| 08P000172 | 12P000765 |
| 12P000873 | 15P000549 |
| 17P000452 | 18P000719 |
| 18P000407 | |
| 02Q000971 | 05Q000064 |
| 06Q000057 | 07Q000238 |
| 17Q000853 | 20Q000395 |
| 02R000097 | 02R000901 |
| 03R000578 | 04R000436 |
| 11R000816 | 11R000955 |
| 12R000285 | 12R000322 |
| 17R000556 | 17R000877 |
| 18R000310 | 18R000470 |
| 02S000083 | 03S000436 |
| 04S000442 | 06S000780 |
| 08S000894 | 11S000281 |
| 12S000594 | 14S000464 |
| 20S000308 | 20S000436 |
| 01T000624 | 11T000014 |
| 12T000454 | 16T000908 |
| 17T000302 | 17T000371 |
| 17T000947 | 19T000089 |
| 05U000294 | 08U000871 |
| 10U000848 | 12U000190 |
| 15U000098 | 15U000358 |
| 15U000930 | 17U000934 |
| 03V000404 | 03V000729 |
| 05V000510 | 09V000986 |
| 11V000723 | 16V000070 |
| 17V000594 | 17V000711 |
| 02W000382 | 03W000452 |
| 03W000967 | 10W000694 |
| 12W000539 | 12W000575 |
| 13W000840 | 16W000808 |
| 17W000117 | 20W000698 |
| 03W000674 | |
| 02X000920 | 04X000981 |
| 05X000769 | 06X000190 |
| 16X000524 | 03Y000267 |
| 06Y000556 | 13Y000550 |
| 16Y000464 | 16Y000780 |
| 20Y000573 | 09Z000124 |
| 11Z000446 | 14Z000779 |

## நண்பகல் நிகழ்ச்சியில் மாற்றமில்லை

கோட்டை, புதன்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நண்பகல் நிகழ்ச்சிகள் முன்னர் அறிவித்தபடி இல்லாது நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி 1-30 மணிக்கே முடிவடையும்.

6 நாள் வகுப்பு

## 'உடனடியாக செயல்படுத்தாதீர்'

கோட்டை, புதன்

'வாரத்தில் 6 நாட்கள் பாடசாலை வேலைநாட்களாக இருக்கவேண்டும் என்ற தீர்மானத்தை உடனடியாகச் செயற்படுத்தாது அதை நிறுத்திவைத்துவிட்டு அதுகுறித்து இறுதி முடிவெடுக்குமுன்னர் ஆசிரியர்களுடன் கலந்தாலோசிக்கவேண்டும்"

ஸ்ரீலங்கா ஜாதிகுரு சங்கம் மேற்கண்டவாறு கல்வி அமைச்சரைக் கோரியுள்ளது. நாட்டின் மிகப் பெரிய ஆசிரியசங்கமான இச் சங்கம் கல்வியமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிலேயே இவ்வாறு கோரியுள்ளது.

மேலும் இம் மகஜரில் ஆசிரியர்களின் பல குறைபாடுகள் பற்றியும் ஜாதிக குரு சங்கமய எடுத்துக் கூறியுள்ளது.

# 500 பட்டதாரிகளுக்கு இன்றுமுதல் விசேஷபயிற்சி

கோட்டை, புதன்

பிரிவு அபிவிருத்தி உதவியாளர்களாக இன்று 500 பட்டதாரிகள் விசேஷ பயிற்சியில் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

நாடெங்கிலும் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் கைத்தொழில் பிரிவுகளை அரசாங்கம் நிறுவவுள்ளது. இதற்காக ஒவ்வொரு பிரிவு அபிவிருத்தி சபைகளும் நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு அபிவிருத்தி மன்றங்களில் கடமையாற்றுவதற்காக இந்த பட்டதாரிகளுக்கு விசேஷ பயிற்சி அளிக்கப்படுகிறது.

பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வந்தவர்களில் இந்த 500 பேரும் தெரிவு செய்யப்பட்டு இவ் விசேஷ பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

உள்ளூரிலுள்ள மூலப் பொருட்களைக் கொண்டு இந்த கைத்தொழில் பிரிவுகளை அரசாங்கம் நிறுவவுள்ளது.

# கோவில் காணிகளை சுவீகரிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணத்திலுள்ள கோவில் காணிகளை சுவீகரித்து அக்காணியில் வாழும் மக்களுக்கு வழங்கும்படி வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு பீட்டர் கெனமனிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது இவ்விஷயமாக விபரமாக மகஜர் தயாரித்து யாழ்ப்பாண மேயர் மூலம் அனுப்பப்பட்டிருப்பதாக உதவி மேயர் நேற்று தெரிவித்தார்.

அமைச்சர் பீட்டர் கெனமன் சிவன் கோவில் இராமேஸ்வரம் கோவில்களுக்கு சொந்தமான காணிகளைப் பார்வையிட்டார் அவருடன் யாழ். மேயர் திரு அல்பிரட் துரையப்பா, உதவி மேயர் திரு ஏ துரைராஜசிங்கம் மற்றும் சபை உறுப்பினரும் சென்றிருந்தனர்.

கோயில்காணிகளில்வாழும் மக்களின் கஷ்டங்களை உதவி மேயர் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர் சிவன் கோவில் காணியில் சுமார் 60 குடும்பங்களும், இராமேஸ்வரம் காணியில் சுமார் 40 குடும்பங்களும் இருப்பதாகவும் உதவி மேயர் தெரிவித்தார் இராமேஸ்வரத்திற்குரிய 50 பரப்புகாணி இருப்பதாகவும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் முதலியார் தறை [illegible] ஆகிய இடங்களில் உள்ள காணிகளையும் பார்வையிட்டார். அரசடியில் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொழிலாளர்

# "பொருளாதாரம் வளர கடின உழைப்பு வேண்டும்"

—அமைச்சர் கெனமன்

மாவிட்டபுரம், புதன்

"தொழிலாளர்கள் தமது பிரச்சினைகளை ஒற்றுமையால் தான் தீர்க்கமுடியும். தனித்து நின்று ஒருபோதும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது" என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு பீட்டர்கெனமன் யாழ் மாவட்ட தொழிலாளர் மத்தியில் பேசுகையில் கூறினார்.

காங்கேசன்துறை விருந்தினர் விடுதியில் அமைச்சரைச் சந்தித்த தொழிலாளர்கள் தாம் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாணத் தொழிற் சங்கங்களை முதலாளிகள் அங்கீகரிப்பதில்லையென்றும், இதை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம், ஹோட்டல், சாப்பு, குடிவகை சிப்பந்திகள் சங்கம் இலங்கை அரசாங்க கூட்டுஸ்தாபன தொழிலாளர் சங்கம், ஐக்கிய அபிவிருத்தி தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், லங்கா தொழிற்சங்கத்தலைவர் திரு ஏ வைத்திலிங்கம், திரு வி பொன்னம்பலம், எஸ் விஜயானந்தன், எஸ். நடராசா ஆகியோரும் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பதில் அளித்துப் பேசுகையில், இன்று தொழிலாளர்கள் கூடி தமக்குஇவ்வளவு வரவேற்பு அளித்தமைக்கு மகிழ்ச்சியடைவதாகவும் இங்குள்ள தொழிலாளரின் பிரச்சினைகளை அறிந்துகொள்ள இது வாய்ப்பு ஏற்படுத்தியதாகவும் சொன்னார்.

'யாழ்ப்பாணத்தில் இப்போதுதான் சிறு சிறு தொழிற்சாலைகள் ஆரம்பமாகின்றன. தொழிலாளர்களும் பெருக பிரச்சினைகளும் பெருகிக்கொண்டுவருகிறது. மற்றும் உலக நாடுகளைப் போல் நமது நாட்டிலும் தொழில் துறை மாற்றங்கள் ஏற்பட வேண்டும். தொழிலாள மக்கள் சுபிட்சமாக வாழ்ந்து பொருளாதாரத்தை பெருக்கத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். பொருளாதார நிலையில் இன்று நாடுஉள்ள நிலையில் தொழிலாளர் ஊக்கமாகச் செயல்பட வேண்டும்" என அமைச்சர் கெனமன் கூறினார்.

'வடஇலங்கையில் உள்ள தொழிலாள விவசாய மக்கள் தென் இலங்கையில் உள்ள மக்களுடன் கைகோர்த்து ஐக்கியப்பட்டு உரிமைகளைப் பெறப் போராட வேண்டும்" என அவர் தெரிவித்தார்.

## உற்சவம்

மாவிட்டபுரம், வியா

மாறனி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. 12-ம் திகதி திருச்சொரூப ஊர்வலமும் 13-ம் திகதி திருநாட் பூசையும் நிகழும். வணபிதா எஸ் துரைசிங்கம்பூசைகளை நிறைவேற்றுவார்.

இலங்கை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வடபகுதி அசைஸ் விசாரணை

# மன்னார் கொள்ளை வழக்கு: 8 எதிரிகளும் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

மன்னார் பரப்பங்கண்டல் கொலைவழக்கில் எதிரிகள் எட்டுப்பேரும் விடுதலை செய்யப்பட்டனர்விசாரணை நடுவில் ஜூரிசபையினரின் முடிவை தொடர்ந்து நீதியரசர் எதிரிகளை விடுதலை செய்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சென்ட் தமோதரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில்மன்னார் பரப்பங்கண்டலில் 68-ம் ஆண்டு ஜூலை 6-ம்தேதி பி. வி.கந்தசாமி, தோமஸ் பீட்டர், ரங்கன் சுப்பையா கணபதி சின்னத்துரை ஜீ வீரசிங்கம். திருமாள் காளிமுத்து, ஆறுகப்பு சுப்பிரமணியம், வீரசிங்கம் சுப்பையாஆகியோர் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், ஆர். முத்தனின் வீட்டுக்குள் கொள்ளையடித்ததாகவும் அதே நேரம் அதேஇடத்தில் பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும், வன்முறையில் ஈடுபட்டதாகவும் 3500 ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கத்தையும் கொள்ளையடித்ததாகவும், எம், கந்தையாஎன்பவருக்கு காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஆர். விஸ்வநாதன், ஜி. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ விஸ்வநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

ஆர். முத்தன், முத்து கந்தையா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

அசைஸ் விசாரணை நாளைவரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

# சித்தாயுர்வேதப் பயிற்சிக்கு சமஸ்கிருதம் அவசியம்

— வைத்தியர் கு. செல்வத்துரை —

எந்த ஒரு சாஸ்திரத்தின் வளர்ச்சிக்கும் பிறமொழி உதவியும் அவசியமாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமது மொழியையும் சமயத்தையும் வளர்த்தற்கு ஆதாரமாக இருந்தது அவருடைய சமஸ்கிருத பாண்டித்தியமேயாம்.

யாழ்ப்பாணத்திலிருந்த பண்டிதர்கள் யாபேரும் சபாபதி பண்டிதர், சிவப்பிரகாசபண்டிதர், சிவஞான முனிவர் குமாரசாமிப் புலவர் கணேசையர் முதலானவர்களும் இவர்கட்குமுன் இருந்தவர்களும் தமிழ் மேதைகளாய்த் திகழ்ந்தவர்களும் அவர்தாம் அவ்வாறு திகழ்ந்ததற்கு அடிப்படை அறிவு வடமொழித் தேர்வுடைமையாம்"

கடைசியாகத் தமிழில் எழுந்த இலக்கண நூல் நன்னூலிலும் வடமொழி தற்பவம் தற்சமமாகக் கலந்துள்ளது.

சரித்திர வரலாற்றில் வடமேல்கணவாயூடு வந்த ஜேர்மனியர் இந்தியாவின் லக்ஷ்மியாயிருந்த பெரிய வாசிகசாலையைக் கொள்ளையடித்துப் பல பெரிய நூல்களைக் கொண்டு சென்றனர். அவை சமஸ்கிருத மொழியில் காணப்பட்டதால்ஜேர்மனியர் சமஸ்கிருத மொழியில் அந்நூல்களை ஆராய்ந்தனர். அதன்பயனாக ஜேர்மனியர் டாக்டர்கள் ஆகவும் விஞ்ஞானிகள் ஆகவும் மிளிரத் தொடங்கினர். சத்திர சிகிச்சையை, சமஸ்கிருதத்திலுள்ள உடல் நூல்களைக் கற்றுத் தேறிய பின்பே அவர்கள் அறிந்தனர் என்கிறது சரித்திரம்.

தமிழர்களாகிய நாம் வேதத்தை முதநூலாகவும் சமய நூலாகவும் மதிக்கிறோம். உபவேதங்களில் ஒன்று ஆயுர்வேதம். அந்த ஆயுர்வேதத்தையும்பேணிப் பாதுகாத்து வருகின்றோம். நம் சித்தர்கள் தம்காலங்களின் முடிவில் ஆயுர்மறை உணர்ந்தோரே ஆயுர்மறை வல்லோரே ஆயுர்வேத முறைமன்றே எனப் பலவிடங்களில் கூறியிருக்கின்றனர். இதனால் அவர்கள் சித்து நிலையைத் காரணமாக இருந்தது. அவர்களின் ஆயுர்வேதப் பயிற்சி என்பது வெள்ளிடை. சித்தர்கள் காயசித்தியடையலாம் என்று கற்றது. அறிந்தது ஆயுர் வேதத்திலேயாம், அவர்கள் ஆயுர்வேத வைத்தியராய்- ஒழுக்க சீலர்களாய் வேதமுறைப்படி வாழ்ந்தமையால் காயசித்தி பெறலாம் என்ற அறிவுமேம்பட்டு விரத முதலியன அனுட்டித்துக் காயசித்தியைப் பெற்றனர். தவ வலிமையும் பெற்றனர், இவற்றிற்கு ஆதாரம் ஆயுர் வேதத்தைக் கையாளக் கற்றவட மொழிப்பயிற்சி என்பதற்கு ஐயம் யாதும் இல்லை.

சித்தர்கள் தமிழர்கள் அல்லது தமிழ்மொழி விருப்புடையவர்கள், சித்தர்கள் என்ற சொல்லே வடமொழிக் கலப்பு, சித்-அறிவு ஆகும். அவர்கள் தமது ஆயுர்வேதத்தின் உச்ச நிலையின் பேற்றால் தவம் இருந்து காயசித்தி அடைந்தவர் அடையும் காலத்தில் கையாண்ட மூலிகை மருந்துகளைத் தமது மொழியில், பாலில் இடுக்கும் வெண்ணெய்போல் கடைந்து, கையில் எடுத்துத் திரட்டித் தந்தது போலத் தந்தமை, தமிழ்மக்கள் செய்த பெரும் பேறாகும்.

நாம் வழங்கும் 'வாகடம்' என்ற சொல் ஆச்சாரிய வாகபடர் என்ற வடமொழி வித்வானின் பின் அவர் தந்த நூலேயாம்.

நம் சித்த மாணவர் பட்டப்படிப்புக்கு சமஸ்கிருதம் ஒரு பாடமாக எடுக்க வேண்டும் என்பது மேற்காட்டியவற்றால் தெளிவில் விளங்கும்; தற்பொழுது இலங்கையிலும் இந்தியாவிலும் வடமொழியிலிருந்து பெயர்க்கப்பட்ட சார்ங்கதர சம்ஹிதை, அஷ்டாங்க ஹிருதயம், மாதவ நிதானம், இரசரத்தின சாமுச்சியம். பதார்த்தகுணவிளக்கம் (தாவர தாது ஜீவ வர்க்கம்) முதலிய நூல்களே பட்டப்படிப்புக்குத் தமிழ் மாணவர்கட்குப் படிப்பிக்கப் படுகின்றன. அதிலும் வடமொழி தற்சமமாகவும் தற்பவமாகவும் விரவிக் காணப்படுகின்றன. மேற்காட்டிய நூல்கள் முட்டின்றிக் கற்பதற்கும் வடமொழி அவசியமாகிறது சித்தர்கள் தந்த ஆவுஷதங்கள் பட்டப்படிப்பு மாணவர்களின் ஆராய்ச்சிப் படிப்புக்கள் முடிந்தபின் ஔஷதமாகக் கையாள வேண்டியவை.

சித்தர்களின் ஔஷதாதிகளின் முறை மகப்பை ஆராய்ச்சி செய்ய வேண்டுமானால் ஆயுர்வேதம் கற்க வேண்டும். அதற்கு சமஸ்கிருதமொழி பட்டப்படிப்பின் முன்னும் பின்னும் வேண்டப்படும் தர்க்க ரீதியாக சித்த வைத்தியத்தை உச்சநிலைப்படுத்த ஆயுர்வேத மூலபாஷை கற்க வேண்டியது அவசியம்"

சித்தர்களுடைய பலநூல்கள் தமிழில் உண்டு, அவையும் அரசு பேணுதால் கிடைத்தல் அரிது. அதில் உள்ள தமிழ்ப் பாஷையினைக் குவதற்கே சமஸ்கிருதம் வேண்டும், உதாரணம், தேரையர் தைலவர்க்கச் சுருக்கம் விளங்குவதற்கு துவிபாஷா பண்டிதர்களே வல்லவராவர். இப்படியே வைத்தியநூலின் முட்டறுக்கு இருமொழிப் பாண்டித்தியம் அத்தியாவசியம்.

இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் ஆயுர்வேதம் வளருகிறது. அவர்கள் வடமொழி பாளி ஆகிய மூல பாஷைகளைக்கற்று நல்ல வைத்திய நூல்களை ஆக்குகின்றனர், முஸ்லீம் மக்களும் உருதுபாஷையை ஆர்வத்துடன் கற்று யூனானி வைத்தியத்தை மேம்படச் செய்கின்றனர்.

தம் மாணவர்களுக்கும் சித்த ஆயுர்வேதப் பயிற்சியில் ஆர்வம் தழைக்க வேண்டின் சமஸ்கிருத பாடம் கட்டாயம் படிப்பிக்க வேண்டும்.

---

சுழிபுரம், புதன்

மினாய்ப் பயிருக்குக் கிருமிநாசினி தெளித்துக் கொண்டிருந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு. வ. தம்பிஐயா என்பவர் மயங்கிய நிலையில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

---

## நியமனம்

கோட்டை, புதன்

கொழும்பு நல்வீதி அரசினர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு க இராசலிங்கம் இம்மாதம் முதலாம் திகதி முதல் கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். கடந்தமுறை செனட்சபை உறுப்பினருக்குப் போட்டியிட்ட திரு இராசலிங்கம் ஒரு எம் ஏ பட்டதாரியாவார்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க